# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 13/2017**

Prosecution witness:3

| | | | |
|---|---|---|---|
| Name: | சுப்பிரமணியன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

**Accused absent. Petition 317 crpc filed and allowed.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 02.08.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தேனி மாவட்டம் சின்னமனுார் காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 02.12.2015 ம் தேதியன்று சிறப்பு சார்பு ஆய்வாளர் 02.12.2015 அன்று காலை யில் தலைமைக்காவலர் ஜெயபாண்டி மற்றும் முருகன் ஆகியோருடன் தேனி சாலையில் உள்ள பிரணவ் கல்யாணமகால் முன்பாக காலை 9.00 மணிக்கு வாகனதணிக்கையின் போது ரித்திகா என்று எழுதப்பட்ட TN 61 B8175 என்ற ஆட்டோவை சந்தேகத்தின் பேரில் தடுத்து நிறுத்தி விசாரித்தபோது அந்த ஆட்டோவின் பின்னால் ஒரு பெண் அமர்ந்திருந்துள்ளார். ஓட்டிவந்த நபர் பற்றி விசாரித்தபோது அவர் பெயர் விலாசம் கூறியுள்ளார். பின்னால் அமர்ந்திருந்த பெண்ணை விசாரித்தபோது அவர் தனது பெயர் சந்திரா என்று கூறியுள்ளார். ஆட்டோவில் இருந்த பெண்ணிடம் அவர் வைத்திருந்த பொட்டலம் பற்றி விசாரிக்க அது கஞ்சா என்று கூறியுள்ளார். பின்னர்

அவரிடம் தங்களை சோதனை செய்வதற்கு அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ, அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடமோ அழைத்து செல்ல கோர உரிமை உள்ளது என்று கூறியபோது அவர் சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆகிய தாங்களே சோதனை செய்யலர் என்று கூறியுள்ளார். அதன் அடிப்படையில் சோதனை சம்மத கடிதம் தயாரித்து அதில் அவரிடம் கையொப்பம் பெற்றுள்ளார். பின்னர் கஞ்சா பற்றி விசாரிக்க அவர் தன்னிட்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். பின்னர் அவர் கொடுத்த கஞ்சாவை எடைபோட்டபோது அது 2 கிலோ எடையுடையதாக இருந்துள்ளது. அதில் தலா 50 கிராம் எடையுள்ள இரண்டு பொட்டலங்களை பிரவுண்கலர் பேப்பரில் வைத்து நூலால் கட்டி S1. S2 என குறியீடு செய்து போலீஸ்பட்டன் சீல் வைத்துள்ளார். மீதம் உள்ள கஞ்சாவை பிரவுண் பேப்பரில் கட்டி போலீஸ்பட்டன் சீல்வைத்து P1 என குறியீடு செய்து கைப்பற்றியுள்ளார். மேற்படி பொருட்களுடன் 2 ம் எதிரியின் ஆட்டோவையும் 10.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார். பின்னர் எதிரிகள் இருவரையும் 11.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து 11.45 மணிக்கு சொத்துக்களுடனும், எதிரிகளுடன் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து எனது புலன் விசாரணைக்கு வைத்தார். மேற்படி உதவி ஆய்வாளர் கொடுத்த விசாரணை கோப்பை பெற்றுக்கொண்டு நான் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சொத்துக்களையும் எதிரியையும் வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சொத்துக்களை அனுப்பி வைக்க நான் படிவம்-91 தயாரித்தேன். படிவம்-91 அ.சா.ஆ. 9 ஆகும். 1 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 3 வது எதிரி-சோங்கு தேவர் மகன் ஆண்டி என்பவரிடமிருந்து கஞ்சா வாங்கி வந்தபோது

பிடித்துக் கொண்டதாக கூறியுள்ளார். அதனடிப்படையில் 05.12.2015 அன்று காலை 10.00 மணிக்கு வடகாட்டுப்பட்டி விலக்கு அருகில் மேற்படி ஆண்டி என்பவரை போலீஸ்பார்ட்டி சகிதம் எதிரியை நிலையம் கொண்டு வந்து வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் மாதிரி பொட்டலங்களை இரசாய பகுப்பாய்வு செய்து அறிக்கை பெற்றுத்தரும்படி நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். நான் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.சாஆ.1 ஆகும்.

**<u>1-2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சிறப்பு சார்பு ஆய்வாளர்-அசோகன் ஆவார். அவருக்கு உடனடிமேலதிகாரி உதவி ஆய்வாளர் என்றால் சரிதான். இந்த வழக்கில் உதவி ஆய்வாளர் சாட்சியாக இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் தகவலின் பேரில் சம்பவ இடம் சென்றதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கில் தகவல் தனித்தாளில் எழுத்துமூலமாக பதிவு செய்யப்பட்டதாகவோ, தகவலின் நகல் உடனடி மேலதிகாரிக்கு அனுப்பப்பட்டதாகவோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் சாட்சிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். பெண் காவலர் எதிரியை சோதனை செய்ததாக எதுவும் கூறப்படவில்லை என்றால் சரிதான். அரசுபதிவிதழ் பெற்ற அலுவலரிடமோ, நீதித்துறை நடுவரிமோ அழைதது செல்ல கோருவதற்கு உரிமையுள்ளது என்று அவரது உரிமை எடுத்துரைக்கப்பட்டதாக கூறப்படவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த வழக்கிற்கான குற்ற எண், சட்டப்பிரிவுகள் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த குற்ற எண், சட்டப்பிரிவுகள் குறிப்பிட்டது குறித்து சிறப்பு சார்பு ஆய்வாளர் என்னுடைய விசாரணையில் கூறவில்லை. அத்தாட்சி ஆவணத்தில் சிறப்பு சார்பு

ஆய்வாளர் மற்றும் சாட்சிகள் யாரும் அவர்கள் கையொப்பத்தின் கீழ் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆட்டோ தனிநபருக்கு சொந்தமானது என்றால் சரிதான். ஆய்வு நமூனா, கைது செய்வதற்கு காரணம் தெரிவிக்கும் கடிதம் ஆகியவற்றில் சாட்சிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தானது 01.03.2016 அன்று இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடைப்பட்ட மூன்று மாத காலம் வழக்கு சொத்துக்கள் யாருடைய பாதுகாப்பில் இருந்தது என்பதை காட்டும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். விரிவான அறிக்கை எதுவும் சிறப்பு சார்பு ஆய்வாளர் அனுப்பவில்லை. நான் சொன்னபடி சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் சொன்ன இடத்தில் வைத்து எதிரிகள் கைதுசெய்யப்படவில்லை என்றும் எதிரிகளிடம் இருந்து எந்தவிதமான கஞ்சாவும் கைப்பற்றப்படவில்லை என்றும் ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் போதைப்பொருள் சட்ட விதிகள் முறையாக கடைப்பிடிக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணையில் சம்பவம் பற்றி கூறிய விசயங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது. ஆவணங்கள் அடிப்படையில் தான் கூறுகிறேன். 1-2 எதிரிகளை நான் தான் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதனடிப்படையில் எனக்கு தெரியும். 1-2 எதிரிகளுக்கு வழங்கிய காவல் அடைப்பு அறிக்கையில் எங்களுக்கு கிடைத்த தகவலின் படி நான் கொடுத்த உத்தரவின் படி சார்பு ஆய்வாளர் கண்காணிப்புக்கு சென்று எதிரிகள் மற்றும் சொத்துக்களை கைப்பற்றி என்னிடம் ஒப்படைத்தார் என்று கூறப்பட்டுள்ளது

என்றால் சரிதான். 3 வது எதிரியின் காவல் அடைப்பு அறிக்கையிலும் அவ்வாறுதான் குறிப்பிட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் சிறப்பு சார்பு ஆய்வாளர் R அசோகனாகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது கஞ்சா பற்றி தகவல் பெற்று ஆய்வளருக்கு தகவலை சொல்லி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையில்எங்கள் காவல் துறையினர்யாருக்கும் தகவல் எதுவும் வரவில்லை என்றும் அதனால் தான் அதை ஆவணமாக பதிவு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தகவலாளி சிறப்பு சார்பு ஆய்வாளருடன் சம்பவ இடத்திற்கு வந்தார் என்று சம்பவ சாட்சிகள் எவரும் கூறவில்லை என்றால் சரிதான். முதல் இரண்டு எதிரிகள் ஏற்கனவே தங்களுக்கு தெரிந்த எதிரிகள் என்று சம்பவ இட சாட்சிகள் கூறவில்லை என்றால் சரிதான். எதிரிகள் குறித்த பெயர் அடையாளம் எதுவும் சிறப்பு சார்பு ஆய்வாளர் எனது விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவஇட சாட்சிகள் யாரும் என்னுடைய விசாரணையில் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள கடையில் தராசு வாங்கி எடைபோட்டதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் காலை 9.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் 3 வது பக்கத்தில் வழக்கின் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பின்னர் தயார் செய்ததாக கூறப்படும் அத்தாட்சி,கைதுக்கான காரணத்தை தெரிவிக்கும் நமூனா, ஆய்வு நமூனாவில் குற்ற எண் எதுவும் இல்லை என்றால் சரிதான். முதல் எதிரிக்கான சோதனை சம்மத கடிதத்தில் தேனி மாவட்டம் என்ற வார்த்தை வெள்ளைமை அழிப்பான் வைத்து திருத்தம் செய்யப்படடுள்ளது என்றால் சரிதான். முதல் எதிரி இருவரும் தேனி மாவட்டத்தை சேர்ந்த நபர்கள் என்று

வழக்கு கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் வழக்கு கோப்பை பெற்றவுடன் சம்பவ இடம் சென்று மாதிரி வரைபடம் , பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றால்ச ரிதான். சம்பவ இடத்திற்கும் உசிலம்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கும் இடையே சுமார் 500 அடி துாரம் இருக்கும் என்றால்ச ரியல்ல. 1 கிலோமீட்டர் துாரம் இருக்கும். சம்பவ இடத்திற்கும் உசிலம்பட்டி பேருந்து நிலையத்திற்கும் சுமார் 200 மீட்டர் இடைவெளியிருக்கும். பிரணவ் மகால் திருமணமண்டபம் அமைந்துள்ள இடத்திற்கும் உசிலம்பட்டி பேருந்துநிலையத்திற்கும் இடையில்தான் உசிலம்பட்டி கிராமநிர்வாக அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். சம்பவஇட சாட்சிகள் எனது விசாரணையில் 3 வது எதிரி சம்பவத்தின் போது இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 3 ம் எதிரியிடமிருந்து எவ்விதமான போதைப்பொருளும் நாங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அசோகன் சிறப்பு சார்பு ஆய்வாளராக சம்பவ சமயத்தில் பணியில் இருந்தார் என்றால் சரிதான். வழக்கில் கைப்பற்றியதாக கூறப்படும் சொத்துக்களை எங்களிடம் அவர் தனியே பட்டியலிட்டு ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் ச ரியல்ல. வழக்கின் படிவம்-91 02.12.2015 ம் தேதியன்று நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்போது வழக்கு சொத்துக்களுடன் சேர்த்து தாக்கல் செய்யும்படி நடுவர் நீதிமன்றத்தால் மேற்குறிப்பு செய்யப்பட்டு திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் போதைப்பொருள் சட்டப்பிரிவுகள் -52 ஐ முழுமையாக பின்பற்ற வில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சிறப்பு சார்வு ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் ச ரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலமானது பின்னிட்டு நிலையத்தில் வைத்து

3 வதுஎதிரியை கைதுசெய்யும் நோக்குடன் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 3 ம் எதிரியை கைதுசெய்த பின்னர் முதல் இரண்டு எதிரிகளை வைத்து அடையாள அணிவகுப்புகள் எதுவும் செய்யவில்லை. தயார் செய்யப்பட்டதாக கூறப்படும் அத்தாட்சியல் கைப்பற்றியதாக கூறப்படும் அத்தாட்சியில் இஞ்சின் நம்பர், சேஸ்நம்பர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 3 வது எதிரியை கைதுசெய்த பின்னர் 3 வது எதிரியின் வீட்டின் அருகில் உள்ளவர்களை விசாரித்து இந்த வழக்கின் வாகனம் 3 வது எதிரியின்வாகனம் வீட்டிற்கு வந்ததா என்று விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. இந்த வழக்கில் போதைப்பொருள் விதிகள் முறையாக பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. 3 வதுஎ திரியை யார் எனக்கு அடையாளம் காட்டியது என்று சொன்னால் தகவலாளி சொன்னார். தகவலாளி எதுவும் எதிரியை பற்றி தங்களிடம் அடையாளம் காட்டவில்லை என்றும் நான் உண்மைக்கு புறம்பாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வ ழக்கின் ஒப்புதல் வாக்குமூலமானது போதைப்பொருள் சட்ட விதிமுறைப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த எதிரிக்கும் மற்ற இரண்டு எதிரிகளுக்கும் எந்தவிதத்திலும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 3 வது எதிரியும் மற்ற எதிரிகளும் 3 ம் எதிரியின் ஊரில் வந்து சந்தித்து பேசியதாக சாட்சியம் எதுவும் இல்லை. எங்கள் காவல் நிலையத்தில் போடப்பட்ட பொய்யான வழக்கிற்கு ஆதரவாக நான் நிலையத்தில் வைத்து பின்னிட்டு ஆவணங்களில் கையொப்பம் இட்டு

பொய் சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல.  பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட பொட்டலங்கள் சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.